Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 282 | உள்ளூர் - 10.10.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 282 | வெளியூர் - 11.10.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

பரிகாரம் பலிக்குமா? பலிக்காதா?...

சாகித்ய அகாடமியில் 30 பணியிடங்கள்!

ராகுல்–விஜய்யுடன் சந்திப்பு!

டெல்லியில் கைது 600: உச்சக்கட்ட பாதுகாப்பு!

## 8 அமைதிக்கான நோபல் பரிசை நான் பெற்றிருக்க வேண்டும்: டிரம்ப்!



வாஷிங்டன், அக். 10–

வாஷ்ங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் டொனால்ட் டிரம்ப் பேசியதாவது: உங்கள் (அமெரிக்க மக்கள்) அதிபராகிய எனக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை. இது நார்வே நாட்டுக்கும் நோபல் பரிசு கமிட்டிக்கும் ஏற்பட்ட அழியாத கறை. இந்தப் பரிசு வழங்கப்படாததை நாங்கள் (அமெரிக்கா) எப்போதும் மறக்கமாட்டோம். ஐக்கிய நாடுகள் சபையில் பணிபுரியும், இதுவரை யாரும் கேள்விப்பட்டிராத ஒருவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நானும் அந்த நபரைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை, இருப்பினும் வாழ்த்துகள். நான் தீர்த்து வைத்த ஒவ்வொரு போருக்கும், அமைதிக்கான நோபல் பரிசை 8 முறை பெற்றிருக்க வேண்டும். ஆனால், அந்தப் பரிசை நார்வே எனக்கு வழங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமர் மோடி சென்னை வருகை: 22,000 போலீசாருடன் ஐந்தடுக்கு பாதுகாப்பு!



சென்னை, அக். 10–

முதல்வர் விஜய்யுடன் இணைந்து...: சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக ஞாயிற்றுக்கிழமை (அக்.11) தில்லியில் இருந்து பிரதமர் நரேந்திர மோடி காலை 8.15 மணியளவில் தனி விமானம் மூலம் சென்னை வருகிறார். காலை 11.15 மணிக்கு சென்னை விமான நிலையம் வரும் அவர், கார் மூலம் போரூர் புறவழிச்சாலை மெட்ரோ ரயில் நிலையம் செல்கிறார். அங்கு முதல்வர் விஜய்யுடன் சேர்ந்து போரூர்–பூந்தமல்லி மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் தொடங்கி வைக்கிறார். இருவரும் மெட்ரோ ரயிலில் பயணிக்கின்றனர். அதன் பின்னர் நண்பகல் 12.15 மணியளவில் சென்னை போரூரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஆதி குபேர ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்கிறார்.

**மக்களைச் சந்திக்கும் பிரதமர் மோடி:** அங்கிருந்து கார் மூலம் கிண்டி ஐஐடியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க நண்பகல் 12.30 மணியளவில் வருகிறார். பின்னர் அங்கிருந்து நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்குச் செல்கிறார்.

அங்கு பிற்பகல் 2.40 மணிக்கு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசுகிறார். நிகழ்ச்சி முடிவடைந்த பின்னர், மாலை 3.45 அங்கிருந்து விமான நிலையத்துக்கு பிரதமர் மோடி செல்கிறார். மாலை 4 மணிக்கு தனி விமானம் மூலம் தில்லிக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

ஐஐடி அருகிலும், நந்தம்பாக்கம் பகுதியிலும் பிரதமர் மோடி சாலையில் நடந்து சென்று மக்களைச் சந்திக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**தேசிய பாதுகாப்புப் படை ஆலோசனை:** இதையொட்டி, தில்லியில் இருந்து தேசிய பாதுகாப்பு படையின் சிறப்பு அதிகாரி அமித்குமார், தனது குழுவுடன் கடந்த இரு நாள்களாக சென்னையில் முகாமிட்டுள்ளார்.

**பலத்த பாதுகாப்பு:** பிரதமர் வருகையையொட்டி, சென்னையில் கடந்த ஒரு வாரமாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒருபகுதியாக, மீனம்பாக்கம் விமான நிலையம், சென்னையில் சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், கோயம்பேடு மார்க்கெட், பேருந்து நிலையம் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல முக்கியமான சாலைகள், சாலை சந்திப்புகள் போன்ற இடங்களில் இரவு வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஹோட்டல்கள், தனியார் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் போலீஸார் அடிக்கடி சோதனை சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்துகின்றனர்.

**22,000 போலீஸார்:** பிரதமர் மோடி வருகையையொட்டி, சென்னையில் ஞாயிற்றுக்கிழமை 22,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். இதில் சென்னை பெருநகர காவல் துறைக்கு உள்பட்ட விமான நிலையம், கிண்டி ஐஐடி வளாகம், நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையம் ஆகிய இடங்களில் ஐந்தடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மேலும், 5 கூடுதல் காவல் ஆணையர்கள், 8 இணை ஆணையர்கள், 29 துணை ஆணையர்கள், 80 உதவி ஆணையர்கள் பாது காப்பு பணியில் ஈடுபடுகின்றனர். இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் ஏ.அமல்ராஜ் தலைமையில் செய்யப்பட்டுள்ளது.

**போரூரில் 7,000 போலீஸார்:** போரூர் புறவழிச்சாலை மெட்ரோ ரயில் நிலையம், ஸ்ரீ ஆதி குபேர ஜலகண்டேஸ்வரர் ஆகிய இடங்களில் 7,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். இங்கேயும் ஐந்தடுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. பிரதமர் மோடி, மெட்ரோ ரயிலில் பயணிப்பதால், அந்த மெட்ரோ ரயில் பாதை முழுவதும் போலீஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்படுகின்றனர். இதேபோல பிரதமர் மோடி கார் செல்லும் சாலையில் ஐந்தடிக்கு ஒரு காவலர் பாதுகாப்புப் பணிக்காக நிறுத்தப்படுகிறார்கள். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை வெடிகுண்டு தடுப்புப் பிரிவு போலீஸார், பிரதமர் செல்லும் சாலையை சோதனையிடுகின்றனர்.

**ட்ரோன்கள் பறக்கத் தடை:** பாதுகாப்பு கருதி பிரதமர் மோடி வரும் நேரத்தில் இருந்து நிகழ்ச்சியில் பங்கேற்று திரும்பிச் செல்லும் வரை குறிப்பட்ட சில பகுதிகளில் மட்டும் கடைகளை மூட சென்னை காவல்துறை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் ட்ரோன்கள்”உள்ளிட்ட ஆளில்லாத வான்வழி வாகனங்கள், ஹாட்பலூன்கள் பறப்பதற்கு ஞாயிற்றுக்கிழமை (அக்.11) தடை விதிக்கப்பட்டுள்ளது.

## ராகுல்–விஜய்யுடன் சந்திப்பு!



சென்னை, அக். 10–

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் தொடங்கி, மகாராஷ்டிர மாநிலம் புனே மற்றும் நாசிக் நகரங்கள், மத்தியபிரதேசம் மாநிலம் இந்தூர் போன்ற இடங்களில் ‘மாணவர்கள் குரல்’ நிகழ்ச்சி நடத்திய ராகுல்காந்தி, சென்னையில் உள்ள தீவுத்திடலில் மாணவர்கள் முன்னிலையில் பேசுகிறார். மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மதியம் 12.30 மணிக்கு சென்னை விமான நிலையம் வருகை தரும் ராகுல்காந்தி, முதலமைச்சர் விஜய்யை அவரது நீலாங்கரையில் இல்லத்தில் மதியம் 1.30 மணிக்கு சந்திக்கிறார். பின்னர், சென்னை தீவுத் திடலில் அக், 11 மாலை 5 மணியளவில் நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கும் ‘மாணவர்களின் குரல்’ நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதற்காக தமிழ்நாடு முழுவதும் இணையதளம் மற்றும் கியூ.ஆர். கோடு மூலம் நடத்தப்பட்ட மாணவர்கள் பதிவில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில், 10 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் மட்டுமே பங்கேற்க உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் இருந்து ஏராளமான கல்லூரிகளில் இருந்து மாணவ–மாணவிகள் கலந்து கொள்ள உள்ளனர். மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வரும் ராகுல்காந்தி தாஜ் கன்னிமாரா ஓட்டலில் காங்கிரஸ் நிர்வாகிகள் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்திக்கிறார்.

## டெல்லியில் கைது 600: உச்சக்கட்ட பாதுகாப்பு!



புதுடெல்லி, அக். 10–

டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலக கோரி காக்ரோச் ஜனதா கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், காவல்துறையினரின் எச்சரிக்கையை மீறி போராட்டத்தில் ஈடுபட்ட 600 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் டெல்லி சர்வதேச விமான நிலையத்தில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் தலைவர் அபிஜீத் தீப்கே மற்றும் கட்சி உறுப்பினர்களை விமானத்தில் வைத்து போலீசார் தடுத்து நிறுத்திய காட்சி இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையம் நடத்தி வரும் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) நடவடிக்கைக்கு எதிராகவும், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக கோரியும் காக்ரோச் ஜனதா கட்சி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. மேலும் இந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க வலியுறுத்தி சிஜேபி கட்சி ‘சலோ டெல்லி’ என்ற பேரணிக்கு அழைப்பு விடுத்தது. சிஜேபி அறிவிப்பை தொடர்ந்து, தேசிய தலைநகர் டெல்லியில் 163–வது பிரிவின் கீழ் தடை உத்தரவுகள் அமலில் உள்ளதாகவும், அனுமதியற்ற கூட்டங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காவல்துறை தெரிவித்தது.

இதையடுத்து டெல்லிக்கு செல்லும் பல ரெயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டு, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு காவல்துறை அதிகாரிகள் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் ரெயில் சேவை ரத்து செய்யப்பட்டதால், விமான போக்குவரத்திற்கான கடைசி நேர முன்பதிவுகளின் விலை அதிரித்து காணப்பட்டது.

வாரணாசியில் இருந்து டெல்லி செல்லும் ஸ்பாட் கட்டணங்கள் ஒரு மாதத்திற்கு முன்பு இருந்ததை விட 15% உயர்ந்தது.

அமிர்தசரஸில் இருந்து புறப்படும் விமானக் கட்டணங்கள் சுமார் ரூ.4.000 வரை உயர்ந்தது. லூதியானாவில் இருந்து புறப்படும் விமானத்திற்கான கட்டணங்களும் ரூ.4.301 இல் இருந்து ரூ. 12,987 வரை உயர்ந்தது. இதையடுத்து டெல்லியில் நடைபெறவுள்ள போராட்டத்தில் பெருமளவிலான இளைஞர்கள் கலந்துகொள்ள வேண்டும் என காக்ரோச் ஜனதா கட்சியின் தலைவர் அபிஜீத் தீப்கே தெரிவித்திருந்தார்.

## ரஷ்யாவுடன் அமெரிக்கா ஒப்பந்தம்!

# டீசலுக்காக புதினுடன் கைகோக்கும் டிரம்ப்! போரைத் தொடர ரஷ்யாவுக்குப் பணமா?

## ஜெலென்ஸ்கி கடும் கண்டனம்!!



வாஷிங்டன், அக். 10–

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வைச் சமாளிக்க, ரஷ்யாவிடமிருந்து டீசல் பெற அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக வழங்கப்பட்ட செய்தி தெரிவிக்கிறது. அதிபர் டொனால்ட் டிரம்பின் இந்த நடவடிக்கை, உக்ரைன் ரஷ்யா போர் நடைபெறும் சூழலில் புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நவம்பர் மாத இடைக்காலத் தேர்தலை எதிர்கொள்ளும் அமெரிக்காவில், எரிபொருள் செலவு முக்கியப் பிரச்னையாக உருவெடுத்துள்ளதாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகள், பண்ணை உரிமையாளர்கள், லாரி ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்களின் செலவுச் சுமையைக் குறைப்பதே இந்த முடிவின் நோக்கமாகக் கூறப்படுகிறது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பிறகு, உடனடியாக மூன்று லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான டீசல் விநியோகிக்கப்படும் என டிரம்ப் அறிவித்ததாகச் செய்தி கூறுகிறது. நவம்பரில் மேலும் ஐந்து லட்சம் மெட்ரிக் டன்னும், பின்னர் பத்து லட்சம் மெட்ரிக் டன்னும் அமெரிக்கா மற்றும் உலகச் சந்தைகளுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய டீசல் வர்த்தகத்திற்கு 2027 ஏப்ரல் 7 வரை அனுமதி வழங்கப்படுவதாகவும் செய்தி குறிப்பிடுகிறது. பொருளாதாரத் தடைகளால் அழுத்தத்தை எதிர்கொள்ளும் ரஷ்யாவுக்கு, இந்த விற்பனை வருமானம் நிவாரணமாக அமையக்கூடும். இதற்கு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். டீசல் விற்பனையில் கிடைக்கும் பணத்தை உக்ரைனுக்கு எதிரான போரைத் தொடர ரஷ்யா பயன்படுத்தக்கூடும் என்பது அவரது குற்றச்சாட்டு. போரை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யா மீது அமெரிக்கா அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் உள்நாட்டு விலைச் சுமையைக் குறைக்கும் முயற்சிக்கும், உக்ரைனின் பாதுகாப்புக் கவலைக்கும் இடையிலான முரண்பாடாக இந்த விவகாரம் உருவெடுத்துள்ளது. எரிபொருள் நிவாரணம் தேடும் அமெரிக்காவின் முடிவு, ரஷ்யா மீதான தடைகளின் நோக்கத்தைப் பலவீனப்படுத்துமா என்ற கேள்வியும் எழுகிறது. விலை குறைப்புக்கான உடனடித் தேவையும், போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நீண்டகால நோக்கமும் ஒரே நேரத்தில் நிறைவேறுமா என்பதே இந்தச் சர்ச்சையின் மையம்.

## மகாளய அமாவாசை: முன்னோர்களுக்கு தர்ப்பணம்..!



சென்னை, அக். 10–

மகாளய அமாவாசையை முன்னிட்டு ராமேசுவரத்தில் முக்கிய இடங்களான பஸ் நிலையம், கோவில், 4 ரத வீதிகள், அக்னி தீர்த்த கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. அகில இந்திய புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாகவும், காசிக்கு நிகரானதாகவும் கருதப்படும் ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில் பல்வேறு வகைகளில் சிறப்பு வாய்ந்ததாகும். ஆடி, தை மற்றும் புரட்டாசி அமாவாசை காலங்களில் பல்லாயிரக்கணக்கானோர் வருகை தந்து தம்முடன் வாழ்ந்து மறைந்த முன்னோர்களுக்கு திதி தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது.

**பிதுர் பூஜை**

ஆடி அமாவாசை மற்றும் தை அமாவாசையை விட புரட்டாசி மாதம் வரக்கூடிய மகாளய பட்சம் அமாவாசையில் நம் முன்னோர்கள் மட்டுமல்லாது, மறைந்த நமது நண்பர்கள், குருமார்கள் மற்றும் வளர்ப்பு பிராணிகள் ஆகியோருக்கும் திதி கொடுத்து பிதுர் பூஜை செய்து வழிபட உகந்த நாளாக கருதப்படுகிறது.

**மகாளய பட்சம்**

ஆவணி மாத பவுர்ணமிக்கு அடுத்த நாளிலிருந்து 15 நாட்கள் மகாளய பட்சம் அமாவாசையில் பித்ருபட்ச காலத்தில் மேலுலகில் வாழும் தம்மோடு வாழ்ந்து மறைந்த முன்னோர்கள் ஆத்மா தன் குடும்பத்தினரை காண பூலோகம் வருவதாக இந்துக்களின் நம்பிக்கை. அவ்வாறு செய்வதன் மூலம் அவர்களின் நல்லாசிகளுடன் சிறந்த வாழ்க்கைத் துணையும், கல்வி கேள்விகளில் சிறந்த குழந்தைகள், வீடு, விளைநிலம், பசுக்கள், தொழில் அபிவிருத்தி, ஆரோக்கியம், தீர்க்காயுள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**பக்தர்கள்**

மகாளய அமாவாசை தினமான ராமநாதசுவாமி கோவில் நடை திறக்கப்பட்டு சுவாமி–அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடந்தன. பின்னர் ஸ்படிக லிங்க பூஜை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இன்று காலை முதல் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அக்னி தீர்த்தக்கடலில் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். இதன் காரணமாக கடற்கரையை மறைக்கும் அளவிற்கு மக்கள் கூட்டம் இருந்தது.

**தர்ப்பணம்**

பின்னர் புனித நீராடிய பக்தர்கள் தம்மோடு வாழ்ந்து மறைந்த முன்னோர்களின் ஆத்ம சாந்திக்காக சங்கல்பம், திதி, தர்ப்பணம் செய்து முன்னோர்களின் பசி தீர்க்க பிண்டமிட்டு, கோதானம், வஸ்திர தானம், அன்னதானம் செய்து பிதுர்கர்மா பூஜை செய்து வழிபட்டு வருகின்றனர். தொடர்ந்து ராமநாதசுவாமி கோவிலில் உள்ள 22 புனித தீர்த்தங்களில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து ராமநாதசாமி மற்றும் பர்வதவர்த்தினி அம்பாளை தரிசனம் செய்தனர்.

**கோவில்**

காலை 10 மணி அளவில் அக்னி தீர்த்த கடலில் சுவாமி எழுந்தருளி தீர்த்த வாரி நிகழ்ச்சி நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதன் பின்னர் கோவில் நடை நண்பகல் 1 மணி வரை சாத்தப்பட்டது. 3 மணிக்கு பக்தர்கள் தரிசனத்திற்காக நடைதிறக்கப்பட்டது. பர்வதவர்தினி அம்பாள் வெள்ளி ரதத்தில் எழுந்தருளுகிறார்.

மகாளய அமாவாசையை முன்னிட்டு ராமேசுவரத்தில் முக்கிய இடங்களான பஸ் நிலையம், கோவில், 4 ரத வீதிகள், அக்னி தீர்த்த கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

**சிறப்பு பஸ்கள்**

பாதுகாப்பிற்காகவும், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தவும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சந்தீஷ் உத்தரவின் பெயரில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். ராமேசுவரத்திலிருந்து பக்தர்கள் சொந்த ஊர்களுக்கு திரும்ப சென்னை, மதுரை, கோவை, திருச்சி மற்றும் பெங்களூர் போன்ற முக்கிய நகரங்களுக்கு இன்றும், நாளையும் அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேபோல் மாவட்டத்தின் உள்ள பிரசித்தி பெற்ற சேதுக்கரை, தேவிபட்டினம் கடற்கரையிலும் ஏராளமானோர் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபாடு நடத்தினர்.

**சதுரகிரி**

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சதுரகிரி சுந்தரமகா லிங்கம் கோவிலில் மகாளய அமாவாசை தினத்தையொட்டி நேற்று இரவு முதலே பக்தர்கள் குவிந்தனர். இன்று காலை தாணிப் பாறையில் உள்ள வனத்துறை கேட் திறக்கப்பட்டு பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். பல்வேறு கட்டுப்பாடுகளுடன் மலையேறி சென்ற பக்தர்கள் சுந்தரமகாலிங்கம், சந்தனமகாலிங்கம் சுவாமிகளை தரிசனம் செய்தனர். கடந்த சில தினங்களாக அந்த பகுதியில் நல்ல மழை பெய்து வருவதால் பக்தர்கள் பாதுகாப்புடன் இருக்கவும், நீர் நிலைகளில் குளிக்க வேண்டாம் என்றும் வனத் துறையினர் அறிவுரைகள் கூறி மலையேற அனுமதித்தனர்.

மதுரை மணி

சனிக்கிழமை 10.10.2026

விசுவாவசு தமிழ் வருடம்

புரட்டாசி மாதம் 23-ம் தேதி

தலையங்கம்

## இடைத்தேர்தல் வெற்றி: அங்கீகாரமும் அதிகரிக்கும் பொறுப்பும்!




தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளின் இடைத்தேர்தல் முடிவுகள், விஜய் தலைமையிலான தவெக கூட்டணி அரசுக்கு அரசியல் வலிமையைச் சேர்த்துள்ளன. நான்கு மாத ஆட்சிக்குப் பிறகு கிடைத்துள்ள இந்த வெற்றியை, அரசின் செயல்பாடுகளுக்கு இவ்விரு தொகுதி மக்கள் அளித்துள்ள ஆதரவாகக் கருதலாம். அதேவேளையில், இரண்டு தொகுதிகளின் தீர்ப்பை ஒட்டுமொத்த தமிழகத்தின் கருத்தாக விரிவுபடுத்துவதில் நிதானம் தேவை.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெறாத தவெக, கூட்டணி ஆதரவுடன் ஆட்சி நடத்தும் நிலையில், அதிமுகவைச் சேர்ந்த ஆறு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்து அக்கட்சியில் இணைந்தனர். அவர்களின் தொகுதிகளில் தாராபுரம், மதுராந்தகம் ஆகிய இரண்டுக்கு மட்டும் நடைபெற்ற இடைத்தேர்தல், ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் முக்கியமான அரசியல் சோதனையாக அமைந்தது.

கடந்த பொதுத்தேர்தலில் அதிமுக சார்பில் வென்றவர்கள், இம்முறை தவெக வேட்பாளர்களாகக் களமிறங்கி மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர். மதுராந்தகத்தில் மரகதம் குமரவேல் பெற்ற வெற்றியும், தாராபுரம் தனித் தொகுதியில் கிடைத்த வெற்றியும், கட்சி மாற்றத்திற்குப் பிறகும் வாக்காளர்களின் ஆதரவைத் தக்கவைத்திருப்பதைக் காட்டுகின்றன. எனினும், இந்த ஆதரவில் வேட்பாளர்களின் தனிப்பட்ட செல்வாக்கு, கூட்டணிப் பலம், அரசின் செயல்பாடு ஆகியவற்றின் பங்கைத் தனித்தனியாக மதிப்பிட வேண்டும்.

இந்த வெற்றியின் அவசியத்தை உணர்ந்த முதல்வர் விஜய், இரு தொகுதிகளிலும் தீவிர பிரசாரத்திலும் சாலை வலங்களிலும் ஈடுபட்டார். கூட்டணியிலிருந்து முக்கிய கட்சிகள் விலகிய சூழலில், திமுகவின் பலத்தையும் பாரம்பரிய வாக்கு ஆதரவையும் நிரூபிக்க மு.க.ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கட்சி மாறிய வேட்பாளர்களுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும் என்ற வாதத்தை முன்வைத்தார். இதனால், உள்ளூர் தேர்தல் களம் மாநில அரசியல் போட்டியின் மையமாக மாறியது.

சட்டம் ஒழுங்கு குறித்த எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களும், உறுப்பினர்களின் ராஜினாமா மற்றும் கட்சி மாற்றம் தொடர்பான எதிர்ப்புகளும் ஆளுங்கட்சியின் வெற்றியைத் தடுக்கவில்லை. ஆனால், தேர்தலில் தோல்வி ஏற்பட்டதால் அந்த விமர்சனங்கள் அனைத்தும் பொருளற்றவை என்று கூறிவிட முடியாது. மக்கள் அளித்த தீர்ப்பை மதிப்பதுடன், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை ஆதாரங்களுடன் தொடர்ந்து முன்வைப்பதே எதிர்க்கட்சிகளின் கடமை.

ஆளுங்கட்சிக்கும் இந்த வெற்றி ஒரு நினைவூட்டல். மக்கள் வழங்கிய ஆதரவு, நிர்வாகக் குறைகளைப் புறக்கணிப்பதற்கான அனுமதி அல்ல. குடிநீர், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் பொதுப் பாதுகாப்பில் தெளிவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான பொறுப்பு. மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தங்கள் கட்சி மாற்றத்தை விளக்குவதைவிடத் தொகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்ட வேண்டும்.

தாராபுரம், மதுராந்தகம் முடிவுகள் தவெக அரசுக்கு உற்சாகத்தையும் எதிர்க்கட்சிகளுக்குச் சுயபரிசோதனையின் தேவையையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த வெற்றியின் உண்மையான மதிப்பு, அடுத்தடுத்த மாதங்களில் மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் முன்னேற்றத்தில்தான் வெளிப்படும். தேர்தல் அங்கீகாரத்தை நல்லாட்சியாக மாற்றுவதே அரசின் அடுத்த சோதனை.

**எழுதியவர்:**

**ஆசிரியர் – மதுரை மணி**

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தவெக வெற்றி: எம்எல்ஏ-க்கள் பலம் 109-ஆக உயர்வு!

சென்னை, அக். 10–

தமிழகத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) பேரவைத் தொகுதிகளில் ஆளும் கட்சியான தவெக அபாரமான வெற்றி பெற்றது. அதிமுக வசமிருந்த இவ்விரு தொகுதிகளையும் தவெக கைப்பற்றியது. இதன் மூலம் தமிழக சட்டப்பேரவையில் தவெக எம்எல்ஏ–க்களின் பலம் 109–ஆக உயர்ந்துள்ளது.

இரு தொகுதிகளிலும் அதிமுக மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது.

கடந்த பொதுத்தேர்தலில் மதுராந்தகம் தொகுதியில் மூன்றாம் இடம் பிடித்த திமுக, கூட்டணி கட்சிகள் பல விலகிய நிலையில், இரண்டாம் இடத்துக்கு முன்னேறியது. தாராபுரம் தொகுதியில் அக்கட்சி இரண்டாமிடத்தைத் தக்கவைத்தது. இவ்விரு தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி, இடதுசாரி கட்சிகள் வைப்புத்தொகையை இழந்தன. கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளைக் கைப்பற்றிய தவெக, திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, ஐயுஎம்எல் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி நடத்தி வருகிறது.

அதிமுக சார்பில் வெற்றி பெற்ற எம்எல்ஏ–க்களில் 6 பேர் பதவியை ராஜிநாமா செய்து தவெகவில் இணைந்தனர். இதைத்தொடர்ந்து காலியான அத்தொகுதிகளில் மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய இரு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அக்.6–ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், பதிவான வாக்குகள் வெள்ளிக்கிழமை (அக்.9) எண்ணப்பட்டன.

தாராபுரத்தில்...: தாராபுரம் தொகுதியில் தவெக சார்பில் பொ.சத்தியபாமா, திமுக சார்பில் சௌ.சுகன்யா, அதிமுக சார்பில் க.பானுமதி, நாதக சார்பில் மு.கார்த்திகா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பா.லட்சுமணன் உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இங்கு 80.25 சதவீத வாக்குகள் பதிவாகின. மொத்தம் உள்ள 2,23,306 வாக்காளர்களில் 1,79,214 பேர் வாக்குகளைச் செலுத்தினர்.

பதிவான வாக்குகள் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு அருகில் உள்ள எல்ஆர்ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 14 மேஜைகளில் 23 சுற்றுகளாக எண்ணப்பட்டன. முதலில், காலை 8 மணிக்கு தபால் வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது. 8.30 மணியளவில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது.



முதலில் மாறிய முன்னிலை நிலவரம்: முதல் 4 சுற்றுகளில் அதிமுக வேட்பாளர் கே. பானுமதி முன்னிலை வகித்தார். 5–ஆவது சுற்றின் முடிவில் முன்னிலை நிலவரம் மாறியது. 5–ஆவது சுற்றிலிருந்து சத்தியபாமா முன்னிலை பெற்றார். அந்த முன்னிலையை இறுதிச் சுற்று வரை தக்கவைத்துக் கொண்டார். 11–ஆவது சுற்றின் முடிவில், அதிமுகவை முந்தி திமுக 2–ஆம் இடத்தைப் பிடித்தது.

இறுதிச் சுற்றுக்குப் பின்னர், அஞ்சல் வாக்குகளையும் சேர்த்து பொ. சத்தியபாமா 66,841 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். திமுக வேட்பாளர் சௌ.சுகன்யா 57,370 வாக்குகளையும், அதிமுக வேட்பாளர் க.பானுமதி 45,280 வாக்குகளையும் பெற்றனர். நாதக வேட்பாளர் மு. கார்த்திகா 5,268 வாக்குகளையும், இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் பா. லட்சுமணன் 1,157 வாக்குகளையும் பெற்றனர்.

மதுராந்தகம்: மதுராந்தகம் தொகுதியில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேல் 74,048 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் பரந்தாமன் 54,008 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் கணிதா சம்பத் 47,450 வாக்குகளும் பெற்றனர். தொடக்கத்தில் இருந்தே முன்னிலை வகித்து வந்த மரகதம் குமரவேல் 27 சுற்றுகளின் முடிவில் 20,040 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் பரந்தாமனைத் தோற்கடித்தார்.

மொத்தம் 2,13,788 வாக்காளர்கள் உள்ள நிலையில், 1,84,413 பேர் வாக்களித்தனர். செங்கல்பட்டு அருகே ஆத்தூர் சமூக மேம்பாட்டு ஒருங்கிணைந்த பயிற்சி மையத்தில் பலத்த பாதுகாப்புடன் காலை 8 மணி முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. 4 வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு காரணமாக வாக்கு எண்ணிக்கை சற்று தாமதமானது. மொத்தம் 27 சுற்றுகளாக வாக்குகள் எண்ணப்பட்டன.

இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), தாராபுரம் (தனி) ஆகிய இருவரும் கடந்த பொதுத் தேர்தலில் அதிமுக சார்பில் வெற்றி பெற்றவர்கள். தற்போது அதே தொகுதிகளில் தவெக சார்பில் போட்டியிட்டு எம்எல்ஏ–வாக தேர்வாகியுள்ளனர்.

இடைத் தேர்தல்
மதுராந்தகம்
மொத்த வாக்குகள்–2,13,788
பதிவான வாக்குகள்– 1,84,413
மரகதம் குமரவேல் (தவெக) 74,048
பரந்தாமன் (திமுக)–54,008
கணிதா சம்பத் (அதிமுக)–47,450
ஜானகிராமன் (நாம் தமிழர் கட்சி)–2709
சுகந்தி (மார்க்சிஸ்ட்) –1986

மே பேரவைத் தேர்தல்
மதுராந்தகம்
கட்சி, வாக்குகள்
அதிமுக– 69,284
தவெக– 62,090
திமுக– 59,838
நாதக– 4,950
....

தாராபுரம்...
இடைத் தேர்தல்:
மொத்த வாக்குகள் – 2,23,306
பதிவான வாக்குகள் – 1,79,214
பொ.சத்தியபாமா – தவெக – 66,841
சௌ.சுகன்யா – திமுக – 57,370
க.பானுமதி – அதிமுக – 45,280
மு. கார்த்திகா – நாதக – 5,268
பா. லட்சுமணன் – இந்திய கம்யூனிஸ்ட் – 1,157.

2026 பொதுத் தேர்தல் (ஏப்ரல்) விவரம்:
கட்சி --- வாக்குகள்
அதிமுக – 81,100
திமுக – 64,373
தவெக – 46,438
நாதக – 6,026.
....

அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில் ஆட்சி நடத்தி வரும் தவெகவுக்கு இவ்விரு தொகுதிகளின் வெற்றி மிக முக்கியம் என்பதால், அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான ஜோசப் விஜய் தீவிர பிரசாரம் மேற்கொண்டார். இரு தொகுதிகளிலும் இரு முறை பிரசாரம் மற்றும் சாலை வலம் சென்று வாக்கு சேகரித்தார். அதேபோல, கூட்டணியிலிருந்து முக்கிய கட்சிகள் பல விலகிய நிலையில் திமுக தனது பலத்தை நிரூபிக்கவும், பாரம்பரிய வாக்குகளை தக்கவைக்கவும் அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் மும்முரமாக பிரசாரம் மேற்கொண்டார். அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி, கட்சிக்கு துரோகம் இழைத்து தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மக்கள் தக்கபாடம் புகட்ட வேண்டும் என்றார்.

## சரக்கு ரெயில் பெட்டிகளை கண்காணிக்க ஏ.ஐ. தொழில்நுட்பம் - இந்திய ரெயில்வே!

புதுடெல்லி, அக். 10–

ரெயில் தண்டவாளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்போதே சரக்கு ரெயில் பெட்டிகளை ஏ.ஐ. தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்க இந்திய ரெயில்வே புதிய முயற்சியை கையில் எடுத்திருக்கிறது.

இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் இந்திய ரெயில்வே, தினமும் பல லட்சம் டன் எடையுள்ள அத்தியாவசிய பொருட்களை சரக்கு ரெயில்கள் மூலம் நாடு முழுவதும் கொண்டு சேர்க்கிறது. இவ்வாறு பயணிக்கும் ரெயில்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதும், திருட்டுகளை தடுப்பதும் எப்போதும் மிகப்பெரிய சவாலாகவே இருந்து வந்துள்ளது. அந்த சவாலுக்குத் தீர்வாக, ஓடும் ரெயில்களிலேயே ஆய்வு மேற்கொள்ளும் அதிநவீன ஏ.ஐ. கேமரா தொழில்நுட்பத்தை இந்திய ரெயில்வே வெற்றிகரமாக செயல்படுத்தும் புதிய முயற்சியை தொடங்கியுள்ளது. 'பிராஜெக்ட் திரிஷ்டி' எனும் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைத்தான் இந்தியன் ரெயில்வே அறிமுகப்படுத்தியிருக்கிறது. வடகிழக்கு எல்லை ரெயில்வேயும், கவுகாத்தி ஐ.ஐ.டி.யும் இணைந்து இந்த அதிநவீன கண்காணிப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது. ரெயில்வே தண்டவாள பாதைகளின் சில குறிப்பிட்ட இடங்களில் உயர்ரக கேமராக்களும், ஸ்மார்ட் விளக்குகளும் இதற்காக அமைக்கப்பட்டு, சரக்கு ரெயில்கள் தண்டவாளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்போது, இந்த கேமராக்கள் சரக்கு பெட்டிகளின் கதவுகள் பூட்டுகள் மற்றும் சீலிடப்பட்ட இடங்கள், பெட்டி எண் ஆகியவை படம்பிடிக்கப்படும்.

அவ்வாறு கேமராக்கள் எடுக்கும் படங்களை ஏ.ஐ. மென்பொருள் உடனுக்குடன் ஆய்வு செய்து, கதவு திறந்து இருக்கிறதா? சரியாக பூட்டப்படாமல் இருக்கிறதா? பூட்டுகள், சீல்கள் உடைக்கப்பட்டிருக்கிறதா? என்பதை சில வினாடிகளிலேயே கண்டறிந்து தெரிவித்துவிடும். இதற்கு முன்பு ஏதாவது ஒரு ரெயில் நிலையத்தில் கோடிக்கணக்கான மதிப்புடைய பொருட்களை சுமந்து செல்லும் இந்த சரக்கு ரெயில்களை நிறுத்தி மனித உதவியுடன் ஒவ்வொரு பெட்டியாக சரிபார்க்கப்படும். இதில் தாமதமும் ஏற்படும். ஆனால் இப்போது அதற்கெல்லாம் தீர்வாகவும், வேகமாகவும் இந்த தொழில்நுட்பம் களம் இறக்கப்பட்டிருக்கிறது. எந்த காலநிலைகளிலும் இதன் பயன்பாடு நன்றாக இருக்கும் என சொல்லப்படுகிறது. அசாமில் உள்ள மாலிகான் ரெயில்வே தலைமையக பகுதியில் இந்த தொழில்நுட்பம் அதிகாரபூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது. இதன் துல்லியத்தன்மை, செயல்பாடு முழுமையாக உறுதி செய்யப்பட்ட பிறகு, இந்திய ரெயில்வேயின் அனைத்து மண்டலங்களிலும் இதனை விரிவாக்கம் செய்ய ரெயில்வே திட்டமிட்டிருக்கிறது.

## தங்கம், வெள்ளி, பிளாட்டினம் இறக்குமதிக்கு 3 சதவீத ஜி.எஸ்.டி. வரி!

புதுடெல்லி, அக். 10–

மத்திய வருவாய்த் துறை செயலாளர் அரவிந்த் ஸ்ரீவஸ்தவா டெல்லியில் கூறுகையில், வங்கிகள் மூலம் இறக்குமதி செய்யப்படும் விலைமதிப்பற்ற உலோகங்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி. (ஐ.ஜி.எஸ்.டி.) வரிவிலக்கு மார்ச் 31–ம் தேதியுடன் நிறைவடைந்ததாகத் தெரிவித்தார். இந்தச் சலுகையை அரசு நீட்டிக்காததால், தங்கம் மற்றும் வெள்ளி இறக்குமதியும் ஒரே மாதிரியான வரி நடைமுறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட இறக்குமதி வழிமுறைக்கு மட்டும் வரிச்சலுகை மூலம் முன்னுரிமை கிடைப்பதைத் தவிர்க்கும் நோக்கில், ஏப்ரல் 1–ம் தேதி முதல் இந்த நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதுதொடர்பாக ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் 31–ம் தேதியுடன் வரிவிலக்குச் சலுகை முடிவடைந்த நிலையில், ஏப்ரல் 17–ம் தேதி வெளிநாட்டு வர்த்தகப் பொது இயக்ககம், அங்கீகரிக்கப்பட்ட இறக்குமதியாளர்களின் புதிய பட்டியலை வெளியிட்டது. இருப்பினும், வரிவிலக்கை நீட்டிப்பதற்கான அரசாணை புதுப்பிக்கப்படவில்லை.

அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகர்கள் மூலம் தங்கம் தடையின்றி இறக்குமதி செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில், கடந்த 2017–ம் ஆண்டு முதலில் தங்கத்துக்கு வரிவிலக்குச் சலுகை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இந்தச் சலுகை வெள்ளி மற்றும் பிளாட்டினம் இறக்குமதிக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது அந்தச் சலுகை முடிவுக்கு வந்துள்ளதால், மூன்று உலோகங்களின் இறக்குமதிக்கும் 3 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது.

## 20 கிலோ மீட்டர் சுற்றளவில் சுங்கச்சாவடிகளை ஒட்டி வசிக்கும் உள்ளூர்வாசிகளுக்கு வருடாந்திர 'பாஸ்': மத்திய அரசு திட்டம்!

சென்னை, அக். 10–

சுங்கச்சாவடிகளை ஒட்டி 20 கிலோ மீட்டர் சுற்றளவில் வசிக்கும் உள்ளூர்வாசிகளுக்கு வருடாந்திர 'பாஸ்' அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள சுங்கச்சாவடிகளைச் சுற்றி 20 கிலோமீட்டர் சுற்றளவில் வசிக்கும் உள்ளூர்வாசிகள் தற்போதுள்ள நடைமுறைப்படி, வணிக நோக்கமற்ற சொந்த வாகனங்களுக்கு மாதம் ரூ.350 செலுத்தி டிஜிட்டல் 'பாஸ்'களை பெற்று, புதுப்பித்து பயன்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் மாதாந்திர கட்டணத்தை புதுப்பிப்பதில் சிரமங்கள் மற்றும் கூடுதல் செலவு ஏற்படுவதாக அவர்கள் கருதுகின்றனர்.




இதனை நிவர்த்தி செய்யும் வகையில், ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் புதுப்பிக்கும் வகையில் புதிய 'பாஸ்டேக்' அடிப்படையிலான வருடாந்திர 'பாஸ்' திட்டத்தை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் ஆணையம் வடிவமைக்க உள்ளது. இந்த திட்டத்தில் ஆண்டு கட்டணமாக சுமார் ரூ.3 ஆயிரம் நிர்ணயிக்கப்பட உள்ளது. இதன்மூலம் உள்ளூர் வாகன ஓட்டிகளுக்கு சுங்கக் கட்டணத்தில் சுமார் 28 சதவீதம் வரை சலுகை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை, தொழில் மற்றும் உள்ளூர் தேவைகளுக்காக தினமும் ஒரே சுங்கச்சாவடியை கடந்து செல்லும் வாகன ஓட்டிகளின் சுமையைக் குறைக்கும் வகையில் இந்த திட்டம் கொண்டுவரப்படுகிறது. இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த திட்டத்தினால் சுங்கச்சாவடி அமைத்துள்ள நிறுவனங்களுக்கு ஏற்படும் கட்டண இழப்பை மத்திய அரசே ஈடுசெய்யும் என கூறப்படுகிறது. இந்த புதிய திட்டம் சுங்கச்சாவடிகளை ஒட்டி வாழும் மக்களுக்கு பெரும் நிம்மதியை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## பரிகாரம் பலிக்குமா? பலிக்காதா?...



ஜாதகத்தில் தோஷங்கள் இருப்பதாகக் கூறப்படும் போது, அதனை நீக்க பலரும் கோயில்கள், மந்திரங்கள், தான தர்மங்கள் எனப் பரிகாரங்களை மேற்கொள்கிறார்கள். எந்த பிரச்சனை என்றாலும் அதன் கெடு பலன்கள் குறைவதற்கும், நன்மைகள் நடைபெறுவதற்கும், சுப காரியங்கள் நடைபெறுவதில் இருக்கும் தடை விலகுவதற்கும் ஜோதிட ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பரிகாரங்கள் செய்ய வேண்டும் என சொல்லுவது உண்டு. ஆனால் "நாம் செய்கின்ற பரிகாரம் உண்மையில் பலன் தருமா?" என்ற சந்தேகம் மனதில் எழுவது இயல்பே.

சாஸ்திரங்களில் கூறப்படுவது என்னவென்றால், பரிகாரம் செய்யும் அதே தருணத்தில் தோன்றும் சில சகுனங்கள் அந்த பரிகாரம் பலிக்குமா, இல்லையா என்பதை உணர்த்தும். இந்த சகுனங்களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு உங்களுக்கு ஏற்பட்டால் கூட நீங்கள் செய்யும் பரிகாரம் நிச்சயம் பலன் தரும் என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ளலாம்.

**பரிகாரம் பலிக்கும் எனக் கூறும் 12 சகுனங்கள் :**

1. பூஜை அல்லது கோயில் மணி ஒலி – பரிகாரம் செய்யும் நேரத்தில் கோயில் மணி அல்லது பூஜை மணி ஒலிப்பது, இறை அனுகிரகம் உங்களுக்கு கிடைக்கப் போகிறது என்பதற்கான நிச்சய சகுனம்.

2. கோயில் பிரசாதம் கிடைப்பது – நீங்கள் பரிகாரம் செய்து முடித்து விட்டு வந்ததும் யாராவது திடீரென பிரசாதம் வழங்கினால், உங்கள் பிரார்த்தனை ஏற்கப்பட்டது என்பதற்கான அடையாளம்.

3. மந்திர ஒலி அல்லது பக்திப் பாடல் கேட்பது – எங்கிருந்தோ மந்திரம் அல்லது பக்தி பாடல் காதில் விழுந்தால், அது பரிகாரம் பலிக்கப் போகிறது என்பதற்கான நல்ல குறி.

4. அர்ச்சகர் தோன்றுவது – பரிகாரம் செய்யும் சமயத்தில் கோயில் அர்ச்சகரைக் காண்பது சுப தேவதையின் அனுகிரக சின்னம்.

5. குளித்து வரும் ஒருவரைக் காண்பது – தூய்மை, சுத்தம், மன நிம்மதி இவை பரிகார வெற்றியின் அடையாளங்கள். சுத்தம் குளித்து முடித்து குளத்தில் இருந்து வரும் ஒருவரை காண்பது சிறப்பானது.

6. தெய்வப் படம் அல்லது விக்கிரகம் கண்ணில் படுவது – எந்த தெய்வத்தின் உருவம் கண்களில் பட்டதோ,அந்த தெய்வத்தை வழிபட்டால் பரிகாரம் நிறைவேறும்.

7. தெய்வ நாமம் காதில் விழுவது – யாராவது தெய்வப் பெயரை உச்சரிப்பதைக் கேட்டால், அந்த தெய்வ அருளால் உங்கள் வேண்டுதல் நிறைவேறும்.

8. யாசகர் அல்லது தானம் கேட்பவர் தோன்றுவது – தானம் செய்வதன் மூலம் பரிகாரத் தடைகள் விலகும்.

9. சலவை தொழிலாளியை காண்பது – வஸ்திர தானம் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்த்தும் சகுனம்.

10. தேவையான பொருள் கேட்டு யாராவது வருவது – அவர்கள் கேட்கும் பொருள் அல்லது அதற்குச் சமமான தானம் செய்தால் பரிகாரம் நிறைவேறும்.

11. தெய்வீக சின்னங்கள் அல்லது பறவைகளை காண்பது – தெய்வீக சின்னங்கள் அல்லது தெய்வீக தன்மை கொண்ட மயில், கிளி போன்ற பறவைகளை காண்பது நல்ல சகுனமாகும்.

12. மனதில் திடீரென அமைதி ஏற்படுதல் – எந்த வெளிப்படையான காரணமும் இல்லாமல் மனம் சாந்தமாக மாறினால், அது பரிகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான உயர்ந்த சகுனம்.

## வெயில் தாக்கம் எதிரொலி... டாஸ்மாக் கடைகளில் எகிறிய பீர் விற்பனை!



சென்னை, அக். 10–

தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 30 லட்சம் பெட்டி பீர் வகைகளும், 50 லட்சம் பெட்டி மதுபான வகைகளும் விற்பனையாகின்றன. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், அந்தக் காலகட்டத்தில் பீர் விற்பனை 40 லட்சம் பெட்டிகள் வரை அதிகரிக்கும்.

இந்த ஆண்டு கோடை காலம் முடிவடைந்த பிறகும் வெயிலின் தாக்கம் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால், மதுப்பிரியர்கள் பீர் வாங்குவதற்கு அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக, வழக்கமாக விற்பனை குறையும் செப்டம்பர் மாதத்திலும் பீர் விற்பனை அதிகரித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் தமிழகத்தில் 38.80 லட்சம் பெட்டி பீர் விற்பனையாகியுள்ளது. இதற்கு முந்தைய ஆகஸ்ட் மாதத்தில் 37.20 லட்சம் பெட்டிகளாக இருந்த பீர் விற்பனை, ஒரே மாதத்தில் மேலும் அதிகரித்துள்ளது. கடந்த 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 32.99 லட்சம் பெட்டி பீர் மட்டுமே விற்பனையாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், தமிழகத்தில் கோடை காலம் முடிவடைந்ததும் பொதுவாக பீர் விற்பனை குறையும். இதனால், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் சராசரியாக 30 லட்சம் முதல் 32 லட்சம் பெட்டி பீர் விற்பனையாகும். ஆனால், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதல் முறையாக பீர் விற்பனை 38 லட்சம் பெட்டிகளைத் தாண்டியுள்ளது என்று தெரிவித்தார்.




## இந்த கஞ்சியை வாரத்துக்கு 3 முறை செஞ்சு குடிங்க.. உடல் எடை ஜெட் வேகத்துல குறைவதை பாப்பீங்க..!

உங்களுக்கு இந்த கருப்பு கவுனி பச்சை பயறு கஞ்சியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே கருப்பு கவுனி பச்சை பயறு கஞ்சி ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவையான பொருட்கள்:**

* கருப்பு கவுனி அரிசி – 1 கப் * பச்சை பயறு – 1/2 கப் * தண்ணீர் – 6 கப் * சீரகம் – 1 டீஸ்பூன் * உப்பு – சுவைக்கேற்ப * தேங்காய் பால்/மோர் – தேவையான அளவு

**செய்முறை:**

* முதலில் கருப்பு கவுனி அரிசியை நீரில் 3–4 முறை கழுவிக் கொள்ள வேண்டும்.
* பின் அதில் சுத்தமான நீரை ஊற்றி, குறைந்தது 8–10 மணிநேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும்.
* அதேப் போல் பச்சை பயறை நீரில் 8 மணிநேரம் ஊற வைத்து, பின் ஊற வைத்த பச்சை பயறை ஒரு துணியில் கட்டி, ஒரு நாள் முழுவதும் முளைக்கட்ட வைக்க வேண்டும்.
* பின்னர் ஊற வைத்த கருப்பு கவுனி அரிசியை மிக்சர் ஜாரில் போட்டு கொரகொரவென்று அரைத்துக் கொள்ள வேண்டும்.
* பிறகு குக்கரில் அரைத்த கருப்பு கவுனி அரிசியை எடுத்துக் கொண்டு, அத்துடன் முளைக்கட்ட வைத்த பச்சை பயறை சேர்க்க வேண்டும்.
* பின்பு அதில் 6 கப் நீரை ஊற்றி, சீரகம் சேர்த்து குக்கரை மூடி அடுப்பில் வைத்து, 8 விசில் விட்டு இறக்க வேண்டும்.
* விசில் போனதும் குக்கரைத் திறக்க வேண்டும்.
* அதன் பின் இந்த கஞ்சியை இரண்டு விதத்தில் செய்யலாம். ஒன்று கஞ்சியுடன் தேவையான அளவு கெட்டி தேங்காய் பாலை ஊற்றி, சுவைக்கேற்ப உப்பு சேர்த்து கலந்து குடிக்கலாம்.
* இல்லாவிட்டால் வேக வைத்த கஞ்சியை குளிர வைத்து, மோர் சேர்த்து, சுவைக்கேற்ப உப்பு தூவி, அத்துடன் பொடி யாக நறுக்கிய சின்ன வெங்காயத்தை சேர்த்து கலந்தும் குடிக்கலாம்.

## தங்கம் விலை தொடர் உயர்வு!



சென்னை, அக். 10–

சென்னையில் தங்கம் சவரனுக்கு ரூ. 520 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,11,040–க்கு விற்பனையாகிறது. கிராமுக்கு ரூ. 65 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 13,880 க்கு விற்பனையாகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி கிராம் ரூ. 245–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2 .45 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.



### சினிமா துளிகள்..!

## ஜெயிலர் 2-ல் தமன்னாவை சேர்க்க வேண்டும் என்ற எனது கோரிக்கையை நெல்சன் நிராகரித்தார்: ரஜினி!



ஜெயிலர் 2 சூப்பர் ஷோ நிகழ்வில் நடிகர் ரஜினிகாந்த், " இந்தப் படத்தில் ஒரு பாடலில் ஆவது தமன்னாவை ஆட வையுங்கள் என நான் வைத்த கோரிக்கையை இயக்குநர் நெல்சன் நிராகரித்து விட்டார்'' எனக் கூறியுள்ளார்.

ஜெயிலர் முதல் பாகத்தின் வெற்றியினால் இதன் இரண்டாம் பாகத்தை நெல்சன் திலீப்குமார் இயக்கியுள்ளார். இந்தப் படம் வரும் அக்.15ஆம் தேதி வெளியாகவிருக்கிறது.

இந்தப் படத்தில் ரம்யா கிருஷ்ணன், எஸ்.ஜே. சூர்யா, சுராஜ், வித்யா பாலன், மிதுன் சக்ரவர்த்தி, யோகி பாபு முக்கிய கதாபாத்திரங்களிலும், மோகன் லால், ஷிவராஜ் குமார் சிறப்புத் தோற்றத்திலும் நடித்துள்ளார்கள்.

இந்தப் படத்தின் இசைவெளியீட்டு விழா நடைபெறாததால், உள்ளரங்கில் அனைத்து நடிகர் நடிகைகள் வைத்து சூப்பர் ஷோ என புரமோஷன் செய்யப்பட்டது. இதில் நடிகர் ரஜினிகாந்த் தமன்னா குறித்து பேசியிருப்பதாவது:

ஜெயிலர் 2 படத்தில் எல்லாமே இருக்கிறது. ஒரேயொரு மிஸ்ஸிங் தமன்னா மட்டும்தான். நெல்சனிடம் எப்படியாவது ஒரு பாடலுக்கு தமன்னாவை பயன்படுத்துங்கள் எனக் கூறினேன். அதற்கு நெல்சன், 'உங்களுக்குப் பிடிக்கும் என்பதற்கு எல்லாம் என்னால் வைக்க முடியாது சார்' எனக் கூறிவிட்டார். நான் எனக்குப் பிடிக்கும் என்பதால் கேட்க வில்லை. மக்களுக்குப் பிடிக்கும் என்பதால்தான் கேட்டேன். நான் எனக்குப் பிடித்ததை மட்டுமே வைத்திருந்தால் இந்நேரம் பெங்களூருக்குச் சென்றிருப்பேன். மக்களுக்குப் பிடித்ததை செய்ததால்தான் நான் இன்னும் திரைத்துறையில் நீடிக்கிறேன் என்றார். முதல் பாகத்தில் தமன்னாவின் காவாலா என்ற பாடல் மிகப்பெரிய ஹிட் அடித்தது. இரண்டாம் பாகத்தில் தமன்னாவுக்குப் பதிலாக பூர்ணா, நோரா ஃபதேகி நடனமாடி இருக்கிறார்கள்.

# இந்திய விமானி ஸ்மித் மச்சாருக்கு இஸ்ரேலின் உயரிய விருது அறிவிப்பு!



புதுடெல்லி, அக். 10–

நடுவானில் 172 விமான பயணிகளின் உயிரைக் காப்பாற்றியதை கௌரவிக்கும் வகையில், இந்திய விமானி ஸ்மித் மச்சாருக்கு வீர தீர செயலுக்கான இஸ்ரேலின் உயரிய விருதை அந்த நாட்டு அதிபர் ஐசக் ஹெர்சாக் அறிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் இருந்து இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவுக்கு கடந்த மாதம் 30–ஆம் தேதி 172 பயணிகளுடன் ஃப்ளை துபாய் விமானம் சென்றது. அந்த விமானத்தை இந்திய விமானி ஸ்மித் மச்சார், துணை விமானியான ஓமனைச் சேர்ந்த ஹமாம் அல் ஹமாமி ஆகியோர் இயக்கினர். விமானம் இஸ்ரேலை நெருங்கியபோது, ஸ்மித் மச்சாரை அவசர கால பயன்பாட்டுக்கு உள்ள சிறு கோடாரியால் தாக்கிவிட்டு, விமானத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்து தரையில் மோதும் நாசகார திட்டத்தை செயல்படுத்த ஹமாமி முயன்றார்.

கோடாரியால் வெட்டப்பட்டு பலத்த காயமடைந்த போதிலும், ஹமாமியுடன் கடுமையாகப் போராடி, பிற பயணிகளின் உதவியுடன் விமானம் தரையில் மோத விடாமல் மச்சார் தடுத்தார். இதனால் விமானத்தில் பயணித்த 172 பயணிகள் மற்றும் ஊழியர்கள் உயிர் தப்பினர். விமானம் பத்திரமாக தரையிறங்கியதும் ஸ்மித் மச்சார் பலத்த காயத்துடன் மீட்கப்பட்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், ஜெருசலேமில் உள்ள இஸ்ரேல் அதிபர் மாளிகையில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் விமானத்தை தரையில் மோத விடாமல் தடுத்து நிறுத்திய இஸ்ரேலைச் சேர்ந்த 6 பயணிகளுக்கும் பொது மக்களின் வீர தீர செயலை கௌரவிக்கும் வகையில் அளிக்கப்படும் இஸ்ரேல் அதிபர் விருது வழங்கப்பட்டது. இந்த விருதை 6 பேருக்கும் இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக் வழங்கினார். அப்போது அவர் பேசியபோது, இந்திய விமானி ஸ்மித் மச்சாருக்கும் இஸ்ரேலின் உயரிய விருது வழங்கப்படும் என்று அறிவித்தார்.

மேலும் அவர், மருத்துவ சிகிச்சையில் இருக்கும் ஸ்மித் மச்சார் விரைவாகவும், முழுமையாகவும் குணமடைய வாழ்த்துவதாகவும், மச்சார் குணமடைந்து திரும்பியதும் இஸ்ரேல் மக்கள் சார்பில் அவருக்கு விருது வழங்கப்படும் என்றும் கூறினார்.

# இடைத்தேர்தல்: ஒரே வரியில் சொல்வதென்றால்... மு.க. ஸ்டாலின்!



சென்னை, அக். 10–

இடைத்தேர்தல் முடிவுகள் குறித்து முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் இன்று (அக். 10) ஒரே வரியில் பதிலளித்துள்ளார்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையில், இரண்டு தொகுதிகளிலும் ஆளுங்கட்சியான தவெக வெற்றி பெற்றுள்ளது.

இதன்மூலம், தவெகவின் சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 109 ஆக உயர்ந்துள்ளது. இவ்விரு தொகுதிகளிலும் சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் மூன்றாம் இடத்தைப் பிடித்த திமுக இடைத்தேர்தலில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தல் வெற்றியானது துரோகத்துக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி என மு.க. ஸ்டாலிம் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் நேற்று விமர்சித்திருந்தார்.

இந்த நிலையில், இடைத்தேர்தல் முடிவுகளை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? என்ற செய்தியாளரின் கேள்விக்கு மு.க. ஸ்டாலின் பதிலளித்து பேசியதாவது:

நான் ஏற்கெனவே அறிக்கை கொடுத்துள்ளேன். அதுவே போதுமானது. ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், திமுகவைப் பொறுத்தவரையில், தோல்வியில் வெற்றி; தவெகவைப் பொறுத்தவரையில், வெற்றியில் தோல்வி என்று குறிப்பிட்டுள்ளார்.

# பெசன்ட் நகரில் அமைதியாக போராடியவர்கள் கைது! உதயநிதி கண்டனம்!



சென்னை, அக். 10–

பெசன்ட் நகரில் அமைதி யாக போராடிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது: "தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என்று பெசன்ட் நகரில் அமைதியாக போராடிய இளைஞர்கள் மீது காவல் அராஜகத்தை ஏவி கைது செய்துள்ள இந்த சோஃபா மாடல் அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

ஒட்டுமொத்த நாடும் – இவர்கள் கூட்டணி வைத்திருப்பதாக சொல்லிக்கொள்ளும் சில கட்சிகளும் கூட இந்தப் போராட்டத்தை ஆதரிக்கும் போது, இந்த ஃப்டம்மி முதல்வர், யாருக்கு பயந்து நடுங்கி இந்தப் போராட்டத்தை நசுக்குகிறார்.

சுயமரியாதையும் – நாட்டின் மீதும் அக்கறையும் கொண்ட அறிவார்ந்த இளைஞர்களை கைது செய்வதன் மூலம், தில்லியின் அறிவிக்கப்படாத அடிமை என்பதை இந்த முதல்வர் நிரூபித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை உடனே விடுக்க வேண்டும். ஜனநாயகத்தைக் காப்பாற்றத் துடிக்கும் இளைஞர் படையின் குரலை ஒடுக்குவதை ஏற்கமுடியாது'' என்று உதயநிதி குறிப்பிட்டுள்ளார்.

# பிப்ரவரி முதல் ஜூலை வரை மின்சாரம் கொள்முதல்: ஒப்பந்தப்புள்ளி கோரியது மின் வாரியம்!



சென்னை, அக். 10–

தமிழகத்தில் மின் தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், அடுத்த ஆண்டு (2027) பிப்ரவரி முதல் ஜூலை வரை 6 மாதங்களுக்கு மின்சாரம் கொள்முதல் செய்ய தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது.

தமிழகத்தின் சராசரி மின் தேவை நாளொன்றுக்கு சுமார் 18,000 மெகாவாட்டாக உள்ள நிலையில், கோடைக்காலத்தில் இது 20,000 மெகாவாட்டைக் கடக்கிறது. நிகழாண்டு ஜூலை 14–இல் அதிகபட்சமாக 21,724 மெகாவாட் மின் தேவை பதிவானது. இதற்கிடையே, கடந்த ஆண்டைவிட உச்சபட்ச மின் தேவை சுமார் 3,000 மெகாவாட் அதிகரித்துள்ளதாக மின் வாரியம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் மின் தேவையைச் சமாளிக்க, வரும் அக். 12 முதல் 31–ஆம் தேதி வரை காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் உச்சபட்ச மின் தேவைக்காக 4,500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய மின் வாரியம் அண்மையில் ஒப்பந்தப்புள்ளி கோரியது. நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 2 மணி வரை 1,500 மெகாவாட்டும், மாலை 6 முதல் நள்ளிரவு 12 வரை 3,000 மெகாவாட்டும் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து மின்சாரம் கொள்முதல்: இந்த நிலையில், 2027 பிப். 1 முதல் ஜூலை 31 வரை வெளிமாநிலங்கள் மற்றும் தமிழகத்திலுள்ள மின் உற்பத்தியாளர்களிடம் இருந்து மின்சாரம் கொள்முதல் செய்ய தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. வழக்கமான மின் தேவையுடன், மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையிலான உச்சபட்ச மின் தேவை நேரத்துக்கான மின்சாரமும் உறுதியான அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

மத்திய அல்லது மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களால் அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தியாளர்கள், மின் வணிகர்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மத்திய மின்துறை அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மின்னணு ஏலம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட உள்ளன.






பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் பல்லடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராமஜெயம் அவர்களின் தலைமையில் கணபதிபாளையம் ஆலமரம் பஸ் ஸ்டாப் அருகில் சௌடேஸ்வரி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு பூஜை செய்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர் மாவட்டத் தலைவர் முனைவர் கிரீஸ் சரவணன் மாவட்ட அமைச்செயலாளர் வெற்றிச்செல்வன் வரவேற்புரை ஒன்றிய தலைவர் க.பிரபாகரன். மற்றும் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பா நந்தகோபால் மாவட்ட இளைஞரணி தலைவர் சத்யராஜ் மாவட்ட துணைச் செயலாளர் கலைச் செல்வம் மாவட்ட பொறுப்பாளர்கள் ராஜா ,கள்ளிமேடு ராஜா ,அருள்புரம் குமார், ஒன்றிய செயலாளர் மங்களம் ரவிச்சந்திரன் ஒன்றிய செயலாளர் நாச்சிபாளையம் சிவா பல்லடம் மேற்கு ஒன்றிய செயலாளர் செயலாளர் கோவிந்தம் பல்லடம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஆறுமுகம் கௌதம், தமிழ்ச்செல்வன், ராஜா திருப்பதி, தவசி ,அருள், மற்றும் மாவட்டம் மாநில ஒன்றிய நகர அனைத்து பொறுப்பாளர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பழனி சண்முக நதியில் இன்று மகாளய அமாவாசையொட்டி முன்னோர்களுக்கு பொதுமக்கள் தர்ப்பணம் கொடுத்தனர்.

# வேலை வாய்ப்பு

## சாகித்ய அகாடமியில் 30 பணியிடங்கள்!




சாகித்ய அகாடமியில் துணைச் செயலாளர், உதவி ஆசிரியர், மூத்த நூலகம் மற்றும் தகவல் உதவியாளர், இளநிலை மொழிபெயர்ப்பு அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர், நிகழ்ச்சி உதவியாளர், வெளியீட்டு உதவியாளர், பிழைதிருத்துநர்பொது உதவியாளர், சுருக்கெழுத்தர் நிலை II, தூதுவர்ரைடர், வேன் ஓட்டுநர், இளநிலை எழுத்தர் மற்றும் பல்பணி ஊழியர் உள்ளிட்ட பதவிகளில் மொத்தம் 30 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு வேலைவாய்ப்புப் பிரிவைச் சேர்ந்த இப்பணிகள் நிரந்தர அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. பணியிடம் இந்தியா முழுவதும் அமையும்.

அறிவிப்பு எண்: 50/2/2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன் – https://sahitya–akademi.gov.in/

விண்ணப்பத் தொடக்க நாள்: 22.08.2026

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: 21.10.2026

கல்வித் தகுதி, வயது வரம்பு, சம்பளம், தேர்வு முறை மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி உள்ளிட்ட விவரங்களை சாகித்ய அகாடமியின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள அறிவிப்பில் பார்த்து விண்ணப்பிக்கவும்.

# உடல்நலக்குறைவு: துரைமுருகன் மருத்துவமனையில் அனுமதி!



சென்னை, அக். 10–

திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் திடீர் உடல்நலக் குறைவால் சென்னை கிரீம்ஸ் சாலை அப்பல்லோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தினமணி செய்தி தெரிவிக்கிறது. இதயப் பிரச்னை காரணமாக அனுமதிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கிரிப்டோ வர்த்தகம்: ஈரானுக்கு அமெரிக்கா புதிய நெருக்கடி!



வாஷிங்டன், அக். 10–

பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில், ஈரான் கிரிப்டோகரன்சி மூலம் மறைமுக நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, ஈரானுடன் தொடர்புடைய 1 பில்லியன் டாலர் மதிப்பிலான கிரிப்டோ சொத்துகளைப் பறிமுதல் செய்ய அமெரிக்கா தயாராகி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# 90ஸ் கிட்ஸுக்கு மகிழ்ச்சி... மீண்டும் வருமா Orkut?

சென்னை, அக். 10–

ஒருகாலத்தில் இந்திய இளைஞர்களிடம் பிரபலமாக இருந்த ஆர்குட் சமூக வலைதளத்தை மீண்டும்



கொண்டுவர அதன் நிறுவனர் ஆர்குட் புயுக்கொக்டென் முயற்சி மேற்கொண்டுள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது. உண்மையான நட்பையும் மனித இணைப்பையும் வளர்க்கும் தளமாக உருவாக்க, orkut.com மூலம் ஆதரவு திரட்டப்படுகிறது. வெளியீட்டுத் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்

## மாணவர் கையில் புத்தகம்... அதிகாரி பையில் உதவித்தொகை!

### பிச்சை எடுப்பதில் கௌரவக் குறைச்சலா... படிப்புப் பணத்தைச் சுருட்டுவதில் மட்டும் கௌரவமா?




# இடைத்தேர்தல் முடிவுகள் உணர்த்தும் செய்தி...!



சென்னை, அக். 10–

அதிமுக எம்எல்ஏக்கள் ராஜிநாமா செய்ததால் காலியான மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய இரு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் ஆளும்தவெக வென்றுள்ளது. இரு தொகுதிகளிலும் தவெக, திமுக, அதிமுக பெற்ற வாக்கு சதவீதம் அரசியல் களத்தில் பல்வேறு செய்திகளை உணர்த்துகின்றன.

2026 பேரவைத் தேர்தலில் மும்முனைப் போட்டியில் 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்ற அதிமுக, இடைத்தேர்தலில் 3–ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. திமுக கடந்த முறை மதுராந்தகத்தில் 3–ஆவது இடத்தில் இருந்த நிலையில், இப்போது 2–ஆவது இடத்துக்கு முன்னேறியதுடன், தாராபுரத்தில் 2–ஆவது இடத்தைத் தக்கவைத்துள்ளது.

2026 பேரவை பொதுத் தேர்தலுடன் இடைத்தேர்தலை ஒப்பிட்டால் மதுராந்த கத்தில் தவெக 31.32 சதவீதத்தில் இருந்து 40.24 சதவீதத்துக்கு, அதாவது 9.92 சதவீதம் கூடுதலாகப் பெற்றுள்ளது. திமுக 30.18 சதவீதத்தில் இருந்து 29.02 சதவீதமாக அதாவது 1.16 சதவீதம் குறைந்துள்ளது. அதிமுக 34.95 சதவீதத்தில் இருந்து 25.82 சதவீதம் அதாவது 9.13 சதவீதம் சரிந்துள்ளது.

நாம் தமிழர் கட்சி 2.50 சதவீதத்தில் இருந்து 1.28 சதவீதம் அதாவது 1.22 சதவீதம் சரிந்துள்ளது. கடந்த முறை திமுக கூட்டணியில் இருந்த மார்க்சிஸ்ட், இப்போது தனியாக 1.28 சதவீதம் பெற்றுள்ளது. அதேபோல, தாராபுரத்தில் தவெக வுக்கு 23.23 சதவீதத்தில் இருந்து 37.02 சதவீதமாக அதாவது 13.79 சதவீத வாக்குகள் உயர்த்துள்ளன. திமுகவுக்கு 32.20 சதவீதத்தில் இருந்து 31.78 சதவீதம் அதாவது 0.42 சதவீதம் குறைந்துள்ளது. அதிமுகவுக்கு 40.56 சதவீதத்தில் இருந்து 25.08 சதவீதமாக, அதாவது 15.48 சதவீத வாக்குகளை இழந்துள்ளது.

நாதக 3.01 சதவீதத்தில் இருந்து 2.92 சதவீதமாக அதாவது 0.09 சதவீத வாக்குகள் குறைந்துள்ளது. கடந்த முறை திமுக கூட்டணியில் இருந்த இந்திய கம்யூனிஸ்ட், இப்போது தனித்து 0.64 சதவீதம் பெற்றுள்ளது. இந்தப் புள்ளிவிவரங்களை ஆய்வு செய்தால் இரு தொகுதிகளிலும் அதிமுக இழந்த பெரும் பகுதி வாக்குகள் தவெகவுக்கு பரிமாற்றம் ஆகியுள்ளன. திமுக பெரிதாக வாக்குகளை இழக்க வில்லை.

மதுராந்தகத்தில் பாமக கூட்டணியை இழந்ததாலும், தவெக–பாமக கூட்டணி உருவாகி, சௌமியா அன்புமணிக்கு அமைச்சர் பதவி கிடைக்கக்கூடும் என்ற தகவல் வலுத்ததாலும் வன்னியர் வாக்குகள் அப்படியே தவெகவுக்கு மடைமாற்றமாகியுள்ளது.

2016– இல் முதல்வர் வேட்பாளராக அன்புமணியை முன்நிறுத்தியபோது பாமக, மதுராந்தகத்தில் 9.12 சதவீத வாக்குகளைப் பெற்றது. இடைத்தே ர்தலில் தவெக 9.92 சதவீத வாக்குகளை அதிகரித்துள்ளது. அதிமுக 9.13 சதவீதத்தை இழந்துள்ளது. திமுக வாக்கு வங்கி கிட்டத்தட்ட அப்படியே இருக்கும் நிலையில் பாமக வாக்குகள் அப்படியே தவெகவுக்கு பரிமாற்றம் ஆகியிருப்பது தெரிகிறது.

பாமக, வன்னியர் வாக்குகளை இழந்தாலும், பாரம்பரிய பிற சமூக வாக்குகளை அதிமுக இத்தொகுதியில் இழக்க வில்லை. அதிமுக–பாமக–கூட்டணி இருந்திருந்தால் தவெக–அதிமுக–திமுக இடையே மும்முனைப் போட்டி கூர்மையாகியிருக்கும்.

தாராபுரத்தில் அதிமுக இழந்த வாக்குகளை அப்படியே தவெக பெற்றுள்ளது. திமுக வாக்குகளை இழக்கவில்லை. நாதகவும் வாக்குகளை இழக்கவில்லை. இங்கு கொங்கு வேளாளர் கவுண்டர்கள் வாக்குகளை அதிமுக இழக்கவில்லை. ஆனால், அதிமுகவுக்கு விழுந்த பாரம்பரிய அருந்ததியர் மற்றும் பிற சமூக வாக்குகளை அதிமுக, தவெகவிடம் இழந்துள்ளது.

எடுத்துக்காட்டாக, கொங்கு வேளா ளர்கள், அருந்ததியர்கள் அடர்த்தியாக வாழும் குண்டடம் ஒன்றியத்தில் (முதல் 7 சுற்றுகள்) 2026 பேரவைத் தேர்தலில் 28,829 வாக்குகள் பெற்ற அதிமுக, தற்போது 15,244 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளது. அதாவது 13,585 வாக்குகளை இழந்துள்ளது. தவெக 11,671 வாக்குகளில் இருந்து 18,690 வாக்குகளை உயர்த்தியுள்ளது. திமுக 17,366 வாக்குகளில் இருந்து 15,988 வாக்குகளைப் பெற்றுள்ளது. இப்பகு தியில் அதிமுகவுக்கு பாரம்பரியமாக வாக்களித்த அருந்ததியர் மற்றும் பிற சமூக வாக்குகள் தவெகவுக்கு இடமாறியுள்ளன. அதேபோல, கொங்கு வேளாளர்கள், அருந்ததியர்கள் அடர்த்தியாக வாழும் மூலனூர் ஒன்றியத்திலும் இதேபோன்ற நகர்வுதான் உள்ளது. மேலும், தாராபுரம் நகரில் அதிமுகவுக்கு வாக்களித்த அருந்ததியர்கள் மற்றும் பிற சமூக வாக்குகள் தவெகவுக்கு சென்றுள்ளன. அதேநேரத்தில், தாராபுரம் நகரத்தில் திமுகவுக்கு விழுந்த பாரம்பரிய இஸ்லாமிய, கிறிஸ்தவ வாக்குகளில் தவெகவால் சேதாரத்தை ஏற்படுத்த முடியவில்லை.

தாராபுரத்தில் வாக்குகளை தக்கவைத்த நாதக, மதுராந்தகத்தில் ஒரு சதவீத வாக்குகளை தவெகவிடம் இழந்துள்ளது. திமுகவிடம் இருந்து மதுராந்தத்தில் 1 சதவீத வாக்குகளை மார்க்சிஸ்ட் கட்சியும், தாராபுரத்தில் அரை சதவீத வாக்குகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் பிரித்துள்ளன. இடைத்தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது பாரம்பரிய கொங்கு மண்டலத்தில் அதிமுக பலம் குறைந்துள்ளது. பாமகவால் வடதமிழகத்தில் அதிமுக பலம் இழந்துள்ளது. அதிமுக வாக்குகள்மூலம் இரு மண்டலங்களிலும் தவெக பலமாகியுள்ளது. காங்கிரஸ்–விசிக வெளியேறிய நிலையிலும் கொங்கு மண்டலம் மற்றும் வடதமிழகத்தில் திமுக தனது பலத்தை இழக்கவில்லை. தனித்து நின்ற நாதக, கொங்கு மண்டலத்தில் பழைய பலத்தை இழக்கவில்லை. ஆனால், வடதமிழகத்தில் தலித் வாக்குகளை தவெகவிடம் இழந்துள்ளது.

இடதுசாரிகள் தங்களது வாக்குகளை அப்படியே தக்கவைத்துள்ளன.

மு.க.ஸ்டாலின் பேச்சால் ட்விஸ்ட்

தாராபுரத்தில் தவெக 6.7 சதவீத வாக்கு வித்தியாசத்தில் திமுகவை வீழ்த்தியுள்ளது. அங்கு தேவேந்திர குல வேளாளர்கள் சுமார் 12 சதவீதம் பேர் உள்ளனர். தவெக, திமுக, அதிமுக ஆகிய 3 பிரதான கட்சி வேட்பாளர்களும் தேவேந்திர குல வேளாளர்கள்தான். தவெக வேட்பாளர் சத்தியபாமா மீது திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வைத்த உருவகேலி விமர்சனம், அந்தச் சமூக வாக்காளர்கள் குறிப்பாக பெண் வாக்காளர்களிடம் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

தாராபுரத்தில் அந்தச் சமூக மக்கள் திமுகவை பாரம்பரியமாக ஆதரித்து வருகின்றனர். 2021 தேர்தலில் திமுக 1,000 வாக்குகளில் வெற்றிபெற அந்தச் சமூக வாக்குகள்தான் காரணம். ஒருவேளை மு.க.ஸ்டாலின் தனது விமர்சனத்தைத் தவிர்த்திருந்தால், இங்கு 2021 பேரவைத் தேர்தல் முடிவு வந்திருக்கக்கூடும்.



கரூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக எஸ்.செல்வலெட் சுஷ்மா பொறுப்பேற்றுக் கொண்டார்.

# தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி போராட்டம்: சென்னையில் 30-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது!



சென்னை, அக். 10–

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனது பதியிலிருந்து விலக வேண்டும் என்பதை வலியுறுத்தி டெல்லியில் நடைபெறவுள்ள போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, சென்னை பெசன்ட் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 30–க்கும் மேற்பட்ட இளைஞர்களை காவல்துறையினர் அதிரடியாகக் கைது செய்தனர்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் தொடர்பான விவகாரங்களை மையமாகக் கொண்டு தேசிய அளவில் பெரும் அரசியல் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உடனடியாகப் பதவி விலகக் கோரி பல்வேறு அமைப்புகளும் கட்சிகளும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. டெல்லியில் திட்டமிடப்பட்டுள்ள தீவிரப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எதிர்ப்பலைகள் வலுத்து வருகின்றன.

டெல்லிப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், தேர்தல் ஆணையரின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் சென்னையின் முக்கியப் பகுதியான பெசன்ட் நகரில் இளைஞர்கள் திரண்டு திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும் என்ற முழக்கங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டம் நடத்தியது அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறி, அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்ட 30–க்கும் மேற்பட்ட இளைஞர்களைக் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று கைது செய்தனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் கூடுதல் காவல்துறையினர் குவிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்ததுடன், மாநிலத்தில் தேர்தல் ஆணையத்திற்கு எதிரான அரசியல் களம் மேலும் சூடுபிடித்துள்ளதைக் காட்டுகிறது.

# அதிமுக சுயபரிசோதனை செய்ய வேண்டிய தருணம் இது - அன்புமணி!



சென்னை, அக். 10–

எல் நினோ தாக்கம் குறித்து முதல மைச்சர் விஜய் உடனடியாக ஆலோசிக்க வேண்டும் என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* இடைத்தேர்தலில் அதிமுக 3–வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.
* அதிமுக சுயபரிசோதனை செய்ய வேண்டிய தருணம் இது.
* 5 மாதங்களுக்கு முன்பு வென்ற அதிமுக தற்போது 3–வது இடம்.
* தமிழ்நாட்டை அதிக நாட்கள் ஆண்ட அதிமுக 3–வது இடத்திற்கு சென்றுள்ளது.
* அதிமுகவுக்கு நல்ல ஒரு ஆலோசனையாக கூறுகிறேன். தவறான எண்ணத்தில் இல்லை.
* இடைத்தேர்தல் வெற்றி தவெகவிற்கு கூடுதல் பலம் சேர்க்கும்.
* தவெக ஆட்சியில் அமைச்சர் பதவி வேண்டுமென நாங்கள் கேட்கவும் இல்லை, கேட்கப் போவதும் இல்லை.
* மக்கள் சார்ந்த பிரச்சனைகளில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும்.
* எல் நினோ தாக்கம் குறித்து முதலமைச்சர் விஜய் உடனடியாக ஆலோசிக்க வேண்டும்.
* மேட்டூர் அணையில் தற்போது 30 டிஎம்சி தண்ணீர் தான் உள்ளது.
* மேட்டூர் அணையில் இருந்து இன்னும் 1 வாரத்திற்கு தான் தண்ணீர் திறக்க முடியும்.
* இந்த ஆண்டு ஒன்றரை லட்சம் ஏக்கரில் தான் குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது.
* இந்த ஆண்டு சம்பா சாகுபடியும் 1.6 லட்சம் ஏக்கராக குறைந்துள்ளது.
* தமிழ்நாட்டில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.20 வரை உயர்ந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஸ்ரீராம் இலக்கியக் கழகம் நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் மதுரை மண்டல மாணவி சாதனை!



மதுரை, அக். 10–

இந்தியாவில் நிதி வர்த்தகத்தில் முன்னணி இடத்தை வகித்து வரும் ஸ்ரீராம் குழும நிறுவனங்களின் ஒரு அங்கமாகிய ஸ்ரீராம் இலக்கியக் கழகம், தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்க ளுக்காக நடத்திய திருக்குறள் பேச்சுப் போட்டி இறுதிச் சுற்றில் மதுரை மண்டலத்தில் பங்கேற்ற இடையன்குளம், வெங்கிடசாமி நாயுடு நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த அ. மஞ்சுஸ்ரீ இடைநிலைப் பிரிவில் முதல் பரிசை வென்று சாதனை படைத்துள்ளார்.

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், 'இடைநிலைப் பிரிவு (6–8 ஆம் வகுப்பு)', 'மேல்நிலைப் பிரிவு (9–12 வகுப்பு)', 'கல்லூரிப் பிரிவு' என மூன்று பிரிவுகளில் திருக்குறள் பேச்சுப் போட்டியை 1988–ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் மாநில அளவில் நடத்தி வருகிறது. இதில் நடப்பாண்டில் மொத்தம் 5620 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, வேலூர், தாம்பரம், புதுச்சேரி, சேலம், திருச்சி, நெல்லை, மதுரை, தஞ்சாவூர், திருவாரூர், கோவை மற்றும் ஈரோடு ஆகிய 12 மண்டலங்களில் கால் இறுதி மற்றும் அரை இறுதிச் சுற்றுகள், கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்றன. இவற்றிற்கான இறுதிச் சுற்று அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அரை இறுதிச் சுற்றில் வெற்றி பெற்ற 36 போட்டியாளர்கள் (இடைநிலை, மேல்நிலை, கல்லூரி என ஒவ்வொரு பிரிவிலும் – 12 மையங்களில் இருந்து தலா ஒருவர் வீதம் 12 வெற்றியாளர்கள்) இறுதிச் சுற்றில் பங்கேற்றனர்.

இதில் மாநில அளவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரம் வருமாறு:

இடைநிலைப் பிரிவு:

முதல் பரிசு: அ. மஞ்சுஸ்ரீ, வெங்கிடசாமி நாயுடு நடுநிலைப் பள்ளி, இடையன்குளம், விருதுநகர் (மதுரை மையம்)

இரண்டாம் பரிசு: க. ஹரிசரண், வேலம்மாள் வித்யாலயா, வானகரம், சென்னை (சென்னை மையம்)

மூன்றாம் பரிசு: பி. கார்நிஷ், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மூலத்துறை (கோவை மையம்)

மேல்நிலைப் பிரிவு:

முதல் பரிசு: பா. வர்ஷா, ஷெம்ஃபோர்ட் ஃபியூச்சரிஸ்டிக் பள்ளி, சிதம்பரம் (புதுச்சேரி மையம்)

இரண்டாம் பரிசு: ப. யாழினி, சேது பாஸ்கரா நிறைநிலை மேல்நிலைப் பள்ளி, புதூர், அம்பத்தூர், சென்னை (சென்னை மையம்)

மூன்றாம் பரிசு: கீ. சீ. பனிமலர் பாரதி, மேக்ஸ்வெல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் (தஞ்சாவூர் மையம்)

கல்லூரிப் பிரிவு:

முதல் பரிசு: மு. சந்தோஷ்குமார், ஏ. இ. எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி (வேலூர் மையம்)

இரண்டாம் பரிசு: சி. அஸ்வின் அண்ணாமலை, பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரி, சத்தியமங்கலம், ஈரோடு (கோவை மையம்)

மூன்றாம் பரிசு: க. ஸ்ரீநிதி, அ. வ. அ. கல்லூரி (தன்னாட்சி), மன்னம்பந்தல், மயிலாடுதுறை (திருவாரூர் மையம்)

முதல் பரிசு வென்றோருக்கு தலா ரூ. 15,000 ரொக்கமும், இரண்டாம் பரிசை தட்டிச் சென்றோருக்கு தலா ரூ. 10,000 ரொக்கமும், மூன்றாம் பரிசாக தலா ரூ. 7,500 ரொக்கமும் மற்றும் அனைவருக்கும் கோப்பையும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

ஊடகத் தொடர்பு: லீலாவதி, கேட்டலிஸ்ட் பி.ஆர். @ + 98415 8410.

# டெல்டா பகுதி மாணவர்கள் சாதனை! - ஸ்ரீராம் இலக்கியக் கழகம் நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் 2 மாணவர்கள் வெற்றி!



திருச்சி, அக். 10–

இந்தியாவில் நிதி வர்த்தகத்தில் முன்னணி இடத்தை வகித்து வரும் ஸ்ரீராம் குழும நிறுவனங்களின் ஒரு அங்கமாகிய ஸ்ரீராம் இலக்கியக் கழகம், தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக நடத்திய திருக்குறள் பேச்சுப் போட்டி இறுதிச் சுற்றில் டெல்டா பகுதியைச் சேர்ந்த இரண்டு மாணாக்கர்கள் மாநில அளவில் பரிசுகளை வென்று சாதனை படை த்துள்ளனர்.

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், 'இடைநிலைப் பிரிவு (6–8 ஆம் வகுப்பு)', 'மேல்நிலைப் பிரிவு (9–12 வகுப்பு)', 'கல்லூரிப் பிரிவு' என மூன்று பிரிவுகளில் திருக்குறள் பேச்சுப் போட்டியை 1988–ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் மாநில அளவில் நடத்தி வருகிறது. இதில் நடப்பாண்டில் மொத்தம் 5620 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியின் மேல்நிலைப் பிரிவில் தஞ்சாவூர், மேக்ஸ்வெல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி கீ. சீ. பனிமலர் பாரதி மூன்றாம் பரிசையும், கல்லூரிப் பிரிவில் மன்னம்பந்தல், மயிலாடுதுறை, அ. வ. அ. கல்லூரி (தன்னாட்சி) மாணவி க. ஸ்ரீநிதி மூன்றாம் பரிசையும் வென்று சாதனை படைத்துள்ளனர். சென்னை, வேலூர், தாம்பரம், புதுச்சேரி, சேலம், திருச்சி, நெல்லை, மதுரை,தஞ்சாவூர், திருவாரூர், கோவை மற்றும் ஈரோடு ஆகிய 12 மண்டலங்களில் கால் இறுதி மற்றும் அரை இறுதிச் சுற்றுகள், கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்றன. இவற்றி ற்கான இறுதிச் சுற்று அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அரை இறுதிச் சுற்றில் வெற்றி பெற்ற 36 போட்டியாளர்கள் (இடைநிலை, மேல்நிலை, கல்லூரி என ஒவ்வொரு பிரிவிலும் – 12 மையங்களில்இருந்து தலா ஒருவர் வீதம் 12 வெற்றியாளர்கள்) இறுதிச் சுற்றில் பங்கேற்றனர். இதில் மாநில அளவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரம் வருமாறு:

இடைநிலைப் பிரிவு:

* முதல் பரிசு: அ. மஞ்சுஸ்ரீ, வெங்கிடசாமி நாயுடு நடுநிலைப் பள்ளி, இடையன்குளம், விருதுநகர் (மதுரை மையம்)
* இரண்டாம் பரிசு: க. ஹரிசரண், வேலம்மாள் வித்யாலயா, வானகரம், சென்னை (சென்னை மையம்)
* மூன்றாம் பரிசு: பி. கார்நிஷ், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மூலத்துறை (கோவை மையம்)

மேல்நிலைப் பிரிவு:

* முதல் பரிசு: பா. வர்ஷா, ஷெம்ஃபோர்ட் ஃபியூச்சரிஸ்டிக் பள்ளி, சிதம்பரம் (புதுச்சேரி மையம்)
* இரண்டாம் பரிசு: ப. யாழினி, சேது பாஸ்கரா நிறைநிலை மேல்நிலைப் பள்ளி, புதூர், அம்பத்தூர், சென்னை (சென்னை மையம்)
* மூன்றாம் பரிசு: கீ. சீ. பனிமலர் பாரதி, மேக்ஸ்வெல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் (தஞ்சாவூர் மையம்)

கல்லூரிப் பிரிவு:

* முதல் பரிசு: மு. சந்தோஷ்குமார், ஏ. இ. எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி (வேலூர் மையம்)
* இரண்டாம் பரிசு: சி. அஸ்வின் அண்ணாமலை, பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரி, சத்தியமங்கலம், ஈரோடு (கோவை மையம்)
* மூன்றாம் பரிசு: க. ஸ்ரீநிதி, அ. வ. அ. கல்லூரி (தன்னாட்சி), மன்னம்பந்தல், மயிலாடுதுறை (திருவாரூர் மையம்)

முதல் பரிசு வென்றோருக்கு தலா ரூ. 15,000 ரொக்கமும், இரண்டாம் பரிசை தட்டிச் சென்றோருக்கு தலா ரூ. 10,000 ரொக்கமும், மூன்றாம் பரிசாக தலா ரூ. 7,500 ரொக்கமும் மற்றும் அனைவருக்கும் கோப்பையும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020